**தலைப்பு 252 – தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 252 – தொகைமதிப்பு மற்றும் புள்ளவிபரத் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாட்டு கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களும் அடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்புடைய குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் தொகைமதிப்பு மற்றும் புள்ளவிபரத் திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் அடங்கிய பொழிப்பு அறிக்கை 2024 மே மாதம் 29ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 ஆகஸ்ட் மாதம் 23ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

தொகைமதிப்பு மற்றும் புள்ளவிபரத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களின் ஊடாக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்கவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையானதும் நியாமானதுமான நிலைமையினைப் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்பட முடியுமான பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்வதற்கு இயலுமானவாறு தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு ஆகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) ஆம் உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாடு பொருட்டு பயனுறு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணப்படுகிறது என கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டும் என்பதுடன், அம்முறைமையின் பயனுறுத்தன்மை தொடர்பாக அவ்வப்போது மீளாய்வு மேற்கொண்டு அதற்கேற்ப முறைமையினை பயனுறுவாக பேணுவதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ளுதலும் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின்போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தர் தெரியப்படுத்தப்பட்டுள்ளார்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திசைவாக உள்ளன என,

(ஆ) முன்னைய ஆண்டுக்கு ஏற்புடையதாக நிதிக் கூற்றுக்கள் தொடர்பான என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

## 2. நிதி மீளாய்வு

## 2.1 செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2 மூலதனச் செலவு விடயங்கள் பொருட்டு ஒதுக்கப்பட்டிருந்த மொத்தம் ரூபா 30,000,000 நிதியேற்பாடு மீளாய்வாண்டில் எவ்வித பயன்பாடுமின்றி முழுமையாக எஞ்சியிருந்தது. | செலவு விடய இல. 28-2507(13) பொருளாதார நெருக்கடியின் தாக்கம் பற்றிய குடித்தன அளவீடு - இதற்காக நிதியை உருவாக்கிய நிறுவனங்களாகவே தேவையான நிதியேற்பாட்டினை வழங்குவதற்கு பின்னர் நடவடிக்கை எடுத்தமையினால் ரூபா 25,000,000 ஆன நிதியேற்பாடு எஞ்சியிருந்தது.<br><br>செலவு விடய இல. 23-2507(13) சருவதேச தொழில் புள்ளிவிபரவியலாளர்களின் 19ஆவது சம்மேளனத்தில் (ஐஊளுடு) எடுக்கப்பட்ட தீர்மானங்களை செயல்படுத்துதல் பற்றிய முன்னோடி ஆய்வு - 2023ஆம் | வருடாந்த செலவு மதிப்பீடுகளை சரியாகவும் தர்க்கரீதியாகவும் தயாரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆண்டின் தேசிய தேவையொன்றான பொருளாதார நெருக்கடியின் தாக்கம் பற்றிய குடித்தன அளவீட்டினை விரைவாக செயற்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கி நடவடிக்கை எடுப்பதும், . குடிசன மற்றும் வீட்டுவசதிகள் தொகைமதிப்பு கடமைகளுக்காக பிரிவின் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்த நேரிட்டமை காரணமாக, இந்த ஆய்வை மீளாய்வாண்டில் மேற்கொள்வதற்கு இயலாமை நிதியேற்பாடு எஞ்சுவதற்கு இது காரணமாக அமைந்தது. 2024 ஆம் ஆண்டினுள் இந்தப் பணியை முடிவுறுத்துவதற்கு எதிர்பார்க்கிறேன். | |
| (ஆ) | மேலும் 14 மூலதனச் செலவு விடயங்களுக்கு மொத்தம் ரூபா 1,369,796,961 ஆன நிதியேற்பாடுகளிலிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் மொத்தம் ரூபா 456,633,602 ஆன நிதியேற்பாடு எஞ்சியிருந்ததுடன், அது ஒவ்வொரு செலவு விடயம் பொருட்டும் ஒதுக்கப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாட்டின் 5 சதவீதத்திற்கும் 73 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | மீளாய்வாண்டின் இறுதியளவில், 14 மூலதனச் செலவு விடயங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாட்டுக்கும் எஞ்சியுள்ள நிதியேற்பாட்டுக்கும் இடையிலான விகிதம் 5% க்கும் 73% க்கும் இடையிலான வீச்சில் இருந்ததுடன், அதற்கு காரணமாக அமைந்த விடயங்கள் 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் யுஊயு-2(ை) படிவத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன. . | -அதே- |
| (இ) | மீண்டுவரும் செலவு விடயங்களான சம்பளம் மற்றும் கூலி செலவு விடயத்தின் தேறிய நிதியேற்பாட்டிலிருந்து ரூபா 89,599,299 அதாவது 13 சதவீதம் மீதப்படியத்துடன் வாடகை மற்றும் உள்ளூராட்சி நிறுவன வரி செலவு விடயத்தின் தேறிய நிதியேற்பாட்டிலிருந்து ரூபா 1,016,829 அதாவது 51 சதவீதம் மீதம் இருந்தது | 2023 ஆம் ஆண்டிற்கான புதிய ஆட்சேர்ப்பு செய்யப்படாமை மற்றும் சம்பளமற்ற விடுமுறையில் உத்தியோகத்தர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லுதல் என்பன சம்பளம் மற்றும் கூலி செலவு விடயத்தின் நிதியேற்பாடு மீதமாவதற்கு காரணங்களாக அமைத்தன. | - அதே - |

| | | | |
|---|---|---|---|
| | | வாடகை மற்றும் உள்ளூராட்சி நிறுவன வரி செலவு விடயத்திற்கான நிதியேற்பாட்டிற்காக விண்ணப்பிக்கையில், தலைமை அலுவலகத்திற்கான வாடகை சேர்க்கப்பட்டிருந்தாலும், அதற்கான எதிர்பார்த்த வரி மதிப்பீட்டு அறிக்கைகள் கிடைக்காத காரணத்தினால், இந்த மீதம் ஏற்பட்டது. | |
| (ஈ) | செலவு விடய இல. 25-2507(13) கீழ் குடிநீரின் தரம் பற்றிய வீட்டு அளவீட்டுக்கு ரூபா 12,155,700 ஆன குறைநிரப்பு மதிப்பீட்டு நிதியேற்பாடுகள் பெறப்பட்டிருந்தன என்பதுடன், அதில் ரூபா 10,985,700 பயன்படுத்தப்பட்டு ரூபா 1,170,000 அதாவது 10 சதவீதம் மீதம் இருந்தது. | செலவு விடய இல. 25-2507(13) கீழ் இந்த அளவீட்டுக்காக 2023 ஆம் ஆண்டில் ரூபா 12,155,700 தொகை நிதியேற்பாடாக ஒதுக்கப்பட்ட போதிலும், அதற்கான பணம் செலுத்துவதற்கான அங்கீகாரம் 2023.12.04 ஆம் திகதியன்றே கிடைத்தது. அதன்படி, உரிய வவுச்சர்கள் தயாரிக்கப்பட்டு, அந்தக் காலப்பகுதியினுள் செலுத்தக்கூடிய தொகையான ரூபா10,985,000 மட்டுமே கட்டுநிதியாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. குறித்த முழுத் தொகையையும் அந்த ஆண்டினுள் செலுத்தி முடிந்துள்ளதுடன், எஞ்சிய 10% க்கு கிட்டடிய நிதியேற்பாட்டுக்குரிய கொடுப்பனவு 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | - அதே - |
| (உ) | செலவு விடய இல. 26-2507(13) கீழ் வளர்ந்தோர்களின் புகையிலை பயன்பாடு பற்றிய உலகளாவிய அளவீட்டுக்காக ரூபா 10,900,000 ஆன குறைநிரப்பு மதிப்பீடுகள் பெறப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 10,286,000 | செலவு விடய இல. 26-2507(13) கீழ் இந்த அளவீட்டுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 10,900,000 நிதியேற்பாட்டிலிருந்து முன்னாள் பணிப்பாளர் நாயகத்தினால் | - அதே - |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்பட்டு ரூபா 613,400 அதாவது 6 சதவீதம் எஞ்சியிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட வரையறை வரை உத்தியோகத்தர்களின் கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளதுடன், எஞ்சிய பணம் உலக சுகாதார அமைப்பிற்கு (றுர்ழு) திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஊ) | செலவு விடய இல.28-2507(13) கீழ் பொருளாதார நெருக்கடியின் தாக்கம் பற்றிய குடித்தன அளவீட்டுக்காக ரூபா 25,000,000 குறைநிரப்பு மதிப்பீட்டு நிதியேற்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், அது முழுமையாகப் பயன்படுத்தப்படாமல் எஞ்சியிருந்தது. | செலவு விடய இல.28-2507(13) இன் கீழ், இந்த அளவீட்டுக்காக நிதியளிக்கப்பட்ட நிறுவனத்தினாலேயே தேவையான நிதியேற்பாடு வழங்கப்பட்டமையினால் ரூபா 25,000,000 ஆன நிதியேற்பாடு எஞ்சியிருந்தது. | - அதே - |
| (எ) | செலவு விடய இல.29-2509(13) கீழ் ருகுணு வருடாந்த வேலைத் திட்டம் பொருட்டு ரூபா 40,192,857 ஆன குறைநிரப்பு மதிப்பீடுகள் பெறப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 38,192,857 பயன்படுத்தப்பட்டு ரூபா 2,000,000 அதாவது 5 சதவீதம் எஞ்சியிருந்தது. | ரூபா 2,000,000 ஆன நிதி தொழில்நுட்ப ஆதரவிற்காக வழங்கப்பட்டதுடன், அதன் பொருட்டு நடாத்தப்பட்ட செயலமர்வுக்கான செலவு நேரடியாக ருகுணு நிறுவனத்தினால் உறப்பட்டமையினால் ஒதுக்கப்பட்ட நிதி பயன்படுத்தப்படவில்லை. இந்த நிதி குறித்த நிறுவனத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | - அதே - |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண பீ கணக்கு

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இறந்த மூன்று உத்தியோகத்தர்கள் தொடர்பாக, மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளின் மொத்தம் ரூபா 505,339 ஆக | திருமதி கே. விக்னேஸ்வரனிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 92,750 தொகை உத்தியோகத்தரின் மரண பணிக்கொடையலிருந்து அறவிடுவதற்காக ஓய்வூதிய முகாமைத்துவ முறைமையபில் | கடன் மீதிகளை அறவிட்டுக் கொள்வதற்கு துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இருந்ததுடன், அந்த மீதியினுள் 03 வருடங்களுக்கு மேலாக அறவிடப்படாதிருந்த ரூபா 92,750 ஆன கடன் மீதி இருந்தமை அவதானிக்கப்பட்டது. | சேர்க்கப்பட்டுள்ளது.<br><br>செல்வி ஏ.பி. சிங்கன்குட்டியாரச்சி என்பவரின் ஓய்வூதியம் தயாரிப்பதற்கான அனைத்து தகவல்களையும் 2022-09-09 ஆம் திகதி நிகழ்நிலை பதிவேற்றம் Online Upload செய்யப்பட்டது. ஓய்வூதியம் தயாரிக்கப்பட்ட பின், உரிய தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>திரு டபி.ஏ.எஸ்.ஆர். ஜயலால் என்பவரின் ரூபா 176,429 ஆன இடர் கடன் தொகையை மரண பணிக்கொடையலிருந்து கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உரிய ஆவணங்கள் 2024-04-26 திகதியிட்ட கடித்ம் மூலம் ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. | |
| (ஆ) | 2005 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியினுள் சேவையை விட்டு விலகிய ஏழு உத்தியோகத்தர்கள் தொடர்பாக மொத்தம் ரூபா 450,014 ஆன கடன் மீதி நிலுவையாக உள்ளதுடன் மற்றும் மேற்படி கடன் மீதிகள் மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | டபி.எம்.ஜே.சி.வீரகோன் (27,080) – இந்த உத்தியோகத்தரின் வசிப்பிடம் பற்றிய தகவல்களை தேடிக் கொள்ள முடியாது என்பதுடன், அவர் வெளிநாட்டுக்குச் சென்றுள்ளாரா என்பதுபற்றி கண்டறிய அனுப்பப்பட்ட கடிதம் தொடர்பாக 2024-05-15 ஆம் திகதி நினைவூட்டல் கடிதம் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.<br><br>டபி.ஏ.ஜே.எஸ்.குமார் (47,150) - இந்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகையை 2024-05-31 ஆம் திகதிக்கு முன் செலுத்தி முடிக்குமாறு அறிவித்து 2024-04-17 திகதியிட்ட கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.<br><br>ஏ.ஜி.எம்.எஸ்.குமார (38,410) - இந்த உத்தியோகத்தரின் வசிப்பிடம் பற்றிய தகவல்களை தேடிக் கொள்ள | - அதே - |

முடியாது என்பதுடன், தேசிய அடையாள இலக்கம் தொடர்பாக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிய அனுப்பப்பட்ட கடிதம் தொடர்பாக 2024-05-15 ஆம் திகதி மீண்டும் நினைவூட்டல் கடிதம் மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயக திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

எம்.ஜே.டி.கே.பிரியகெலும் (104,250) – கடன் தொகையை உடனடியாக செலுத்துமாறு உத்தியோகத்தரின் தனிப்பட்ட முகவரிக்கு 2023-06-09 திகதியிட்ட கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன், அதன்பின் நினைவூட்டல் கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது. கடன் பெறும்போது சேவையாற்றிய கலாசார திணைக்களத்திலும் உரிய கடன் கோப்பு இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளமையினால், இது தொடர்பில் எதிர்காலத்தில் எவ்வாறு நடவடிக்கை எடுப்பது என வினவி திறைசேரி செயற்பாட்டு பணிப்பாளர் நாயகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

கே.எம்.டி.ஆர்.பி. பெரேரா (78,200) - இந்த உத்தியோகத்தரின் வசிப்பிடம் பற்றிய தகவல்களை தேடிக் கொள்ள முடியாது என்பதுடன், அவர் வெளிநாட்டுக்குச் சென்றுள்ளாரா என்பதுபற்றி கண்டறிய அனுப்பப்பட்ட கடிதம் தொடர்பாக 2024-02-22 ஆம் திகதி நினைவூட்டல் கடிதமும் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

எம்.பீ.ஆர்.ஜே.பண்டார (95,140) - இந்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை தொடர்பில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை

நடைபெறுகிறது என்பதுடன் 2024-08-01 ஆம் திகதி வழக்கு மீள அழைக்கப்படவுள்ளது.

எம்.எஸ்.எம்.சப்ராஸ் (59,784) - வழக்கு தாக்கல் செய்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், தற்போதைய நிலையை 2023-10-03 மற்றும் 2024-01-31 ஆகிய திகதிகள் இட்ட கடிதங்கள்மூலம் விசாரிக்கப்பட்டது.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி<br>ரூபா. | இணக்கமின்மை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் 104(1), 104 (3) හා 104 (4) | - | அச்சகப் பிரிவில், 80 GSM அச்சிடும் கடதாசி இருப்பில் ரீம் 242 பற்றாக்குறை தொடர்பாக நி.பி. பிரகாரம் செயலாற்றி இருக்கவில்லை. | தொலைந்துபோன அச்சிடும் கடதாசி இருப்பினை கண்டறிய ஒரு குழு நியமிக்கப்பட்டதுடன், இந்த பணிக்கு காலம் செல்வதனால், நி.பி.104 (3) இன் கீழ் ஆரம்ப அறிக்கையும் தாமதமானது. | நிதிப்பிரமாணம் பிரகாரம் செயலாற்றுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் 756(6) | - | பண்ட கணிப்பாய்வு அறிக்கையின்படி, குறைபாடுகள் மற்றும் மிகைகள் பற்றி அறிக்கையிடல் மற்றும் நடவடிக்கை எடுத்தல் அடுத்த நிதியாண்டின் ஏப்ரல் 15 ஆம் திகதிக்கு முன் செய்யப்பட வேண்டிய போதிலும், 2022 ஆம் ஆண்டின் பண்ட கணிப்பாய்வு அறிக்கையின்படி, பிரதான அலுவலகப் பொருள் 182 விடயங்களில் மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்குச் சொந்தமான பொருள் 66 விடயங்களில் குறைபாடுகள் என்றவாறு மொத்தம் 248 குறைபாடுகள் இருந்தும், இதுதொடர்பாக மீளாய்வாண்டு இறுதி வரையில், நிதிப்பிரமாணம் பிரகாரம் செயலாற்றி இருக்கவில்லை | இதற்கு நி.பி. 104 இன் கீழ் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையைப் பெற்ற பிறகு, இந்த குறைபாடுகள் பற்றிய பணிகளை முடிக்கவும், மற்றைய குறைபாடுகள் பதிவாகியுள்ள பிரிவுகளில் மீண்டும் பண்ட கணிப்பாய்வு நடத்துமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டதுடன், அதன்படி உரிய அறிக்கை கிடைத்த பின் நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | - அதே - |

.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் 880 | - | பிணை வைக்க வேண்டிய எனினும் பிணை வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காத 66 உத்தியோகத்தர்கள் இருக்கிறார்கள் என அவதானிக்கப்பட்டது. | இதுவரை பிணை வைக்காத உத்தியோகத்தர்களிடம் இருந்தும் பிணை விண்ணப்பங்களை பெற்று பிணை வைப்புக்களை பெறுவதற்கு எதிர்காலத்திலநடவடிக்கை எடுப்பேன். | - அதே - |

## 2.4 வைப்பு மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31ஆம் திகதியன்று பொது வைப்பு கணக்கின் மீதி ரூபா 7,906,833 ஆக இருந்ததுடன், அந்த மீதியினுள் அடங்கிய 2 வைப்புத்தொகைகள் தொடர்பான மொத்தம் ரூபா 5,633,148 மீதிகள் 2 ஆண்டு முதல் 5 ஆண்டுகள் வரையான காலவீச்சில் இருந்தபோதிலும், அந்த மீதி தொடர்பாக நிதிப்பிரமாணம் பிரகாரம் செயலாற்றி இருக்கவில்லை. | சிறுவர் இல்லங்களில் உள்ள பிள்ளைகள் பற்றிய கணக்கெடுப்பு - இதற்கான பணம் செலுத்துவதற்கு தாபன பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் கிடைக்காமையினால், அதற்கான பணம் செலுத்தப்படாமையினால், பொது வைப்புக் கணக்கில் மீதி இருந்தது. எனினும், தற்போது அதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளமையினால், எதிர்காலத்தில் பணம் செலுத்த தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.<br><br>உலகளாவிய வளர்ந்தோர் புகையிலை மற்றும் மதுசார அளவீடு. - 2021 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட GATS அளவீட்டுக்குரிய முதல் சுற்றில் வெளிக்கள கடமைகளை நிறைவேற்றிய உத்தியோகத்தர்களின் வெளிக்கள அலுவலகத்தை பேணுவதற்காக உறப்பட்ட செலவினங்களை ஈடுசெய்யும் பொருட்டு கொடுப்பனவுக்காக ஒதுக்கப்பட்ட மீதியாகும். அந்த பணக் கொடுப்பனவினை இந்த ஆண்டு மேற்கொள்வதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. | நிதிப்பிரமாணம் பிரகாரம் செயலாற்றுதல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தொலைநோக்கு மற்றும் செயற்பணி

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒவ்வொரு 03 வருடங்களுக்கு ஒருமுறை நடத்தப்பட வேண்டிய குடித்தன வருமான, செலவு அளவீடு (HIES), இறுதியாக 2019 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டதுடன் மற்றும் 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட வேண்டியிருந்தது. இந்த அனவீட்டில் இருந்து வெளிப்படும் தகவல்கள், நாட்டின் சமூக, பொருளாதார மற்றும் அபிவிருத்திக் கொள்கைகள் மற்றும் திட்டங்களைக் மதிப்பிடுவதற்கும் அறிமுகப்படுத்துவதற்கும், பிற பல்வேறு சமூக-பொருளாதார குறிகாட்டிகள் மற்றும் வறுமை குறிகாட்டிகளைக் கணக்கிடவும் பயன்படுத்தப்படுகின்றன. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (CCPI) மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (NCPI) கணக்கிடுவதில் பயன்படுத்தப்படும் பொருட்கள் கூடையின் நிறையளிப்பு தொடர்பு காலம் (Reference Period) இந்த அளவீட்டின்மூலம் மேவப்படுவதுடன், குடித்தனத்தின் மொத்த நுகர்வுச் செலவுக்கு ஒவ்வொரு பொருளின் | இந்த அளவீட்டினை 2025 ஆம் ஆண்டின் சனவரி முதல் திசெம்பர் வரையில் நடத்தவதற்குத் தேவையான நடவடிக்கைகள் தற்போது திட்டப்பட்டு வருகின்றன. | மிக முக்கியமான சமூக-பொருளாதார குறிகாட்டிகள் பலவற்றை தயாரிக்கின்ற இந்த அளவீட்டினை விரைவாக நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பங்களிப்பையும் கருத்தில் கொண்டு நிறையளிப்பு செய்வதற்கும் இந்த அளவீட்டின் தரவுகள் மிகவும் முக்கியமானதாகும். இந்த அளவீட்டினை நடத்துவதில் ஏற்பட்ட கால தாமதம் காரணமாக, அந்த அளவீட்டின் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படுகின்ற CCPI மற்றும் NCPI குறிகாட்டிகள் ஊடாக கணக்கிடப்பட்ட பணவீக்க விகிதம் மூலம் சமீபத்தில் ஏற்பட்ட பொருளாதார சூழ்நிலையில் ஏற்பட்ட மாற்றங்களின் தாக்கத்தை துல்லியமாக பிரதிபலிக்காமல் இருந்திருக்கலாம் என அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | குடிசன மற்றும் வீட்டுவசதி தொகைமதிப்பு 2021- இந்த தொகைமதிப்பு பொருட்டு தயாரிக்கப்பட்ட ஆரம்ப திட்டம் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை என்பதுடன், 2021 செயல் திட்டத்தின்படி, அந்த ஆண்டில் முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், இதுவரை நிரற்படுத்தும் படிநிலை மட்டும் முடிவுறுத்தப்பட்டிருந்தது. தொகைமதிப்பு பணிகளுக்காக 2017 முதல் 2024 ஏப்ரல் 30 ஆம் திகதி வரை ரூபா 1,233,151,415 உறப்பட்டதாகக் அவதானிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, | 2024 ஒக்டோபர் மாதத்துக்கு முன் கணக்கெடுப்பு படிநிலையை முடிவுறுத்துவதற்கு சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. | திட்டமிட்ட விதத்தில் தாமதமின்றி தொகைமதிப்பு பணிகளை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| சனாதிபதி செயலகத்தின் செலவு விடயத்தின்மூலம் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் இந்தப் பணிக்கான மொத்தம் ரூபா 4,813,352 ஆன செலவு உறப்பட்டிருந்தது. | | |

### 3.2 பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருடாந்த செயல் திட்டத்தையும் வரைவுசெய்யப்பட்ட வருடாந்த செயலாற்றுகை அறிக்கையையும் ஒப்பிடும்போது, செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திணைக்களத்தின் 07 பிரிவுகளினால் நிறைவேற்றப்பட வேண்டிய 11 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | குடிசன மற்றும் வீட்டுவசதி தொகைமதிப்பு - 2024 தொடர்பான நடவடிக்கைகள் காரணமாக, திட்டமிட்ட அளவுக்கு செயலாற்றினை அடைய முடியவில்லை. | திட்டமிட்டவாறு பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 எதிர்பார்த்த பிரதிபலன்களை பெற்றுக்கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வரைவுசெய்யப்பட்ட வருடாந்த செயலாற்றுகை அறிக்கையின்படி, திணைக்களத்தின் 10 பிரிவுகள் செயல் திட்டத்தில் சேர்க்கப்பட்ட எதிர்பார்த்த பிரதிபலன் | குடிசன மற்றும் வீட்டுவசதி தொகைமதிப்பு 2024 தொடர்பான நடவடிக்கைகள் காரணமாக திட்டமிட்ட அளவுக்கு செயலாற்றினை அடைய முடியவில்லை. | திட்டமிட்டவாறு எதிர்பார்த்த விளைவு மட்டத்தை அடைவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மட்டத்தை அடையவில்லை என்பதுடன் மேலும் பணிகளை நிறைவேற்றுவதில் முன்னேற்றம; 5 சதவீதம் முதல் 75 சதவீதம் வரையிலான வீச்சில் இருந்தது. | | |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 1,116 மில்லியனுக்கும் அதிகமான செலவில் நிர்மாணிக்கப்பட்ட 12 மாடிகளைக் கொண்ட பிரதான அலுவலகக் கட்டடம், நிர்ணயிக்கப்பட்ட நியமத்திற்கு அமைவாக நிர்மாணிக்கப்படவில்லை எனவும், முறையாகப் பராமரிக்கப்படவில்லை எனவும் அவதானிக்கப்படுவதுடன், கட்டடத்தின் மேல் மாடியிலிருந்து கீழ் மாடி வரையில் நீர் கசிவு ஏற்படுகிறது எனவும், 6ம் மாடியின் திறந்த பகுதியில் கண்ணாடி மறைப்பு ஊடாக கட்டடத்திற்குள் பாயும் நீர் மின் உயர்த்தி கிணற்றுக்குள் நுழைகிறது எனவும், தரையில் இப்பட்டுள்ள பாதுகாப்பற்ற மின்சார வயர்களின் காப்பிடும் குழாய்கள் வழியே அலுவலக வளாகத்தினுள் நீர் உட்பாய்வது அவதானிக்கப்படுவதுடன், | அலுவலக கடடடத்தின் மேற்புறம் மற்றும் பக்க சுவர்கள் நீர் புகாதவாறு உரியவாறு அமைக்கப்படாமையினால், மழைநீர் கசிவு ஏற்படுகிறது. 06 வது மாடியின் திறந்த பகுதியிலிருந்து மின் உயர்த்தியின் முன் பகுதிக்கு மழைநீர் கசிகிறது.<br><br>அலுவலக வளாகத்தில் மழைநீர் கசிவு ஏற்படுகின்ற இடங்களிலுள்ள சில மின்சுற்றுகள் துண்டிக்கப்பட்டுள்ளன. சில மின்சுற்றுகள் தண்ணீருடன் தொடர்பு கொள்ளாதபடி வெவ்வேறு இடங்கள் மாற்றப்பட்டு பொருத்தப்பட்டுள்ளன. மின் வயர் தொடர்பான As Built Drawings இல்லாமையினால், எதிர்கால நடவடிக்கை எடுப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. | கூடிய விரைவில் உகந்த பழுதுபார்த்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கட்டடம் பொருட்டு ஒப்பந்தகாரரிடமிருந்து பெற வேண்டிய உறுதிப்படுத்தல்களைப் பெற்றுக் கொள்வதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தினால் உடைந்து விழுந்த முன்பக்க கதவை பழுதுபார்ப்பதற்காக வேறொரு ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டுள்ள ரூபா 3.3 மில்லியன் ஆன தொகை அரசாங்கத்துக்கு மேலதிக செலவு சுமை ஆகியுள்ளது எனவும் அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | திணைக்களத்திற்குச் சொந்தமான கொழும்பு 07 அல்பர்ட் கிறசன்ட் இல் உள்ள பாதை 03 றூட் 1.45 பேச்சஸ் இல் அமைந்துள்ள அச்சிடல் பிரிவின் வளாகம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | உரிய வளாகத்தை முறையாக பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதுடன் நுழைவாயில் உடைந்து, பழுதடைந்து, களஞ்சியங்களில் யன்னல், கதவு மற்றும் கூரை உடைந்து, பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன எனவும், வளாகம் முழுவதும் ஆங்காங்கே | பழுதுபார்த்தல் தொடர்பான மதிப்பீட்டிற்கான பெறுகை அங்கீகாரம் பெற்றதன் பிற்பாடு, பிரதான நுழைவாயில் பழுதுபார்த்தல், கராஜ் பழுதுபார்த்தல் மற்றும் ஒற்றை மாடி கட்டடத்தின் கூரையின் பழுதுபார்த்தல் என்பன விரைவாக மேற்கொள்ளப்படும்.<br><br>களஞ்சியங்களாக பயன்படுத்தப்படும் கட்டடங்களின் கதவுகள், யன்னல்கள், | அரசாங்க சொத்துக்களுக்கு உரிய பாதுகாப்பு கிடைக்கும் வகையில் முறையான வேலைத்திட்டத்தை தயாரிப்பதற்கும், பாதுகாப்பதற்கும், அவற்றை அதிகபட்ச செயல்திறனுடன் பயன்படுத்துவதற்கும் முகாமைத்துவத்தின் |

| | | | |
|---|---|---|---|
| | பழுதடைந்த பொருட்கள் குவிந்து மிகவும் அசுத்தமான நிலையில் காணப்படுகின்றன எனவும், பழுதடைந்த கட்டடங்களின் பாகங்கள் இடிந்து விழுகின்றன எனவும் அவதானிக்கப்பட்டன. | கதவுநிலைகள் பழுதடைந்துள்ளதால், அந்த இடங்களை செங்கற்களால் மூடிவிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், அச்சகப் பிரிவுத் தலைவரின் அங்கீகாரம் பெற்றதன் பிற்பாடு, அடுத்தகட்ட பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.<br><br>தற்போதுள்ள பழுதடைந்த பொருட்கள் அகற்றுமாறு கொழும்பு மாநகர சபைக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>அச்சுப்பொறிகள் நிறுவப்பட்ட கட்டடத்திற்குள் நீர் நுழைவதைத் தடுக்க பிரவேசம் மற்றும் வெளியேறும் இடத்தை மூடுவதற்கு மணல் மூடைகள் இடப்பட்டு மறைக்கப்பட்டன. | போதிய கவனம் செலுத்தப்படல் வேண்டும். |
| (ii) | இந்த வளாகத்தினுள் நடாத்திக்கொண்டுசென்ற அலுவலகப் பணிகள் பத்தரமுல்லை பிரதான கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டபோது இருந்த 52 காற்றுச் சீராக்கிகள் உரிய முறையில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் 12 காற்றுச் சீராக்கிகள் மாத்திரமே பாவனையில் இருப்பது அவதானிக்கப்பட்டது. | அச்சிடல் பிரிவு வளாகத்தில் உள்ள பயன்படுத்தப்படாத காற்றுச் சீராக்கிகளின் ஒரு பகுதி ஏற்கனவே காற்றுச் சீராக்கி இயக்குநரைக் கொண்டு சோதிக்கப்பட்டதுடன், அவற்றில் சில பொறிகள் செயல்படுத்தக்கூடிய நிலையில் இருந்தன. இந்த பொறிகள் நீண்ட காலமாக பயன்படுத்தப்படாமல் இருந்தமையினால், அவற்றைப் பயன்படுத்துவதற்கு முன், தர அறிக்கையைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்வேன். | - அதே - |
| (iii) | அச்சிடல் பிரிவில் பொருத்தப்பட்டிருந்த 03 காற்றுச் சீராக்கிகளின் வெளிப்புற குளிரூட்டும் 03 அலகுகள் (outdoor units) தொலைந்திருந்த போதிலும். நி.பி. பிரகாரம் செயலாற்றி | முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறையியலொன்றை நிறுவுவதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளன. | - அதே - |

| | | | |
|---|---|---|---|
| | இருக்கவில்லை. | | |
| (iv) | அச்சிடல் பிரிவின் ஒவ்வொரு பொறிமூலம் செய்கின்ற வேலைக்காக வழங்கப்படுகின்ற பொருட்களின் அளவு மற்றும் அந்தப் பொறியின் வெளியீட்டு குறிப்புகள் உள்ளிட்ட முறையான ஆவணம் பேணப்படாமையினால், பொறிகளை சர்விஸ் செய்யும் தேவைப்பாடு மற்றும் மீள்நிலைப்படுத்தல் தேவைப்பாடு முன்கூட்டியே கண்டறிய முடியாதிருந்ததுடன், சீர்கேடுகள் ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது என அவதானிக்கப்பட்டது. | இரண்டு அச்சு பொறிகளின் வெளியீட்டு வாசிப்பினைக் காட்டும் மானிகள் பழுதுபார்க்கப்பட்டதன் பிற்பாடு, உரிய ஆவணங்களை முறையாக பேணுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கும் செயற்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. | போதிய கட்டுப்பாட்டு முறைமைகளை அறிமுகப்படுத்த வேண்டும். |
| (v) | அச்சிடல் நடவடிக்கைக்காக பயன்படுத்தப்படும் கடதாசி, தீந்தை போன்ற மூலப் பொருட்கள் முறையாக களஞ்சியப்படுத்தி இருக்கவில்லை என்பதுடன் அதற்காக Bin card உள்ளிட்ட முறையான ஆவணங்கள் பேணப்பட்டிருக்கவில்லை. | களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பொருள் பொருட்டான கொள்கல அட்டை (Bin Card) பராமரிப்பு இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன் உரிய கொள்கல அட்டைகள் களஞ்சியக் காப்பாளரால் பேணப்படல் வேண்டும். 2024 யூன் 01 ஆம் திகதி முதல் செயற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு வருகின்றன. | - அதே - |

## 4. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியளவில், அங்கீகரிக்கப்பட்ட பதவியினர்களில் 25 | மீளாய்வாண்டின் இறுதியளவில், அங்கீகரிக்கப்பட்ட பதவியினர்களில் 25% அதாவது 455 வெற்றிடங்கள் இருந்தன. அரச பாதீட்டுச் | உரிய ஏற்பாடுகளின்படி செயலாற்றி முறையாக |

| | | | |
|---|---|---|---|
| | சதவீதம் அதாவது 455 வெற்றிடங்கள் இருந்தன. | சுற்றறிக்கை 03/2022 மூலம் பணியாளர் ஆட்சேர்ப்பு மட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக 2023 இல் ஆட்சேர்ப்பு செய்ய முடியவில்லை என்பதுடன் வெற்றிடங்களை நிரப்புவதற்கான முயற்சிகள் இந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது பதவியணியை தகுந்தவாறு திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2018 சனவரி 24 ஆம் திகதிய, 02/2018ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் இணைப்பு 02 இன்படி மனித வள அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023/2024 ஆம் ஆண்டிற்கான மனித வள அபிவிருத்தித் திட்டத்தின் வரைவு இத்திணைக்களத்தினால் துறை தயாரிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் செயலாற்றுதல் வேண்டும். |